பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 23 சனிக்கிழமை (05-04-1997) UTHAYAN A Lively Naonatil Tamil Daily கதிர்: 129

## சந்திரிகாவுடனான உடன்பாட்டில்

# அரசின் தீர்வுதிட்டத்தை ஆதரிக்கும் வாக்குறுதி எதுவும் வழங்கவில்லை!

## பி.பி.ஸிக்கு ரணில் தகவல்

லண்டன், ஏப்ரல் 5

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகாவுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான தீர்வுத்திட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கும் வாக்குறுதி எதனையும் தாம் வழங்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

அரசுக்கும், ஐ.தே.க. வுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு குறித்து பி. பி ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்த வழிவகுக்கும் வகையில் உருவாகியுள்ள உடன் பாட்டை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 5

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று நண்பகல் 1.15 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

இந்த கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட வேறுசேதவிவரம் பற்றி தெரியவரவில்லை. (இ-3-4)

## கப்பலில் 500 பேர் இன்று பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 5

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு 500 பயணிகளுடன் கப்பல் சேவை இன்று நடைபெற

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



உடன்பாடு ஏற்பட்ட முதல் நாளே முரண்பாடாய் இருக்கு பாருங்கோ......!

## இலங்கை போன்ற நாட்டுக்கு இத்தகைய உடன்பாடு தேவை

### லியம் பொக்ஸ் தெரிவிப்பு

''விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சு மேற்கொள்ளப் பட்டால் குறுகிய கால— தற்காலிக அரசியல் லாபம் தேடுவதற்காக ஒரு கட்சி செய்வதை மற்றையகட்சி எதிர்ப்பதை இப்போது எட்டப்பட்டுள்ள உடன்பாடு தவிர்க்கிறது. அடிக்கடி மாறும் தன்மை மிக்க இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு இந்த உடன்பாடு அவசியம் என நினைக்கின்றேன்''

பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸ் மேற்கண்டவாறு பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

இலங்கையில் சமாதானம் வெகுதொலைவில்தான் இருக்கின்றது.

ஜனநாயக அரசியல் வாதிகளுக்கு இடையில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சிதான் அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாடு.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## அன்ரன் பாலசிங்கம் - கரிகாலன் பாரிஸ் சென்று திரும்பினரா?

விடுதலைப் புலிகளின் சர்வதேசத் தொடர்பாளர் லோரன்ஸ் திலகர் வன்னி வந்து திரும்பிய பின்னர் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் இருவரான அன்ரன் பாலசிங்கம், கரிகாலன் ஆகியோர் பாரிஸ் சென்று திரும்பினரா?

பி. பி. ஸியின் தமிழகச் செய்தியாளர் சம்பத்குமார் பி. பி. ஸிக்கு அளித்த கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பி உள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

''இலங்கையில் ஆளும் கட்சிக்கும், ஐ. தே. கவுக்கும் இடையே விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது குறித்து உடன்பாடு ஏற்பட்டது தமிழகத்தில் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் எற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேசத் தொடர்பாளரான லோறன்ஸ் திலகர் பாரிஸில் இருந்து இந்தியா வழியாக இலங்கை சென்று வன்னிக்காடுகளில் விடுதலைப் புலிகளின் தலைவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா - ரணில் உடன்பாட்டுக்கு இந்தியா, ஆஸி வரவேற்பு

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் பொருட்டு இலங்கையின் ஆளும் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஒருங்கிணைந்து ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு இணங்கி உள்ளதை இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் பாராட்டி உள்ளன.

இலங்கையின்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை இந்தியா ஆதரிக்கிறது என்று இந்திய உயர்ஸ்தானிகர் நரேஸ்வர் தயாள் தெரிவித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனின் சமாதான முயற்சிகள்: கொழும்பு பத்திரிகைகள் விமர்சனம்

கொழும்பு, ஏப். 5

இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சரின் தலையீட்டைக் கொழும்புப் பத்திரிகைகள் சில கடுமையாக விமர்சித்துள்ளன.

''அரச படைகளுடன் சண்டையில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள் தங்களுக்கு பின்னடைவுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உலகெங்கும் சென்று சிலரை அழைத்து வந்து ஏமாற்றுச் சமாதானத்தை உருவாக்க முயல்கின்றனர். இந்தவிடயத்தில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரும் பிரதி வெளிவிவகார அமைச்சரும், பலிக்கடாக்களாகியுள்ளனர்'' என 'திவயின' சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

பயங்கரவாதப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் பிரிட்டன் மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன் தனது பிரச்சினை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டுக்கு

## 300 தொலைபேசி இணைப்புகள்: தபால் அமைச்சர் நேற்று பணிப்பு

கொழும்பு, ஏப். 5

யாழ். மாவட்டத்தில் 300 தொலைபேசித் தொடர்புகளைக் கொண்ட ஒரு மத்திய பரிவர்த்தனை நிலையம் செப்ரெம்பர் மாத இறுதிக்குள் நிறுவப்பட உள்ளது.

தபால் தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர தொலைத் தொடர்பு திணைக்கள [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைக்கு

## பெண்களை கூட்டிச் செல்லும்போது பெற்றோரையும் அழைத்துச் செல்க

### மேஜர் ஜெனரல் பலகல்லவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 5

பெண்களைவிசாரணைக்கு உட்படுத்தும் சந்தர்ப்பங்களில் பெண் அதிகாரிகளையே ஈடுபடுத்த வேண்டும்; அவர்களை [illegible] கூட்டிச் செல்லும் தேவை ஏற்படின் பெற்றோரையும் உடன் அழைத்தே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கு புளொட் உபதலைவர் என். மாணிக்கதாஸன் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தின் சில கிராமப் புறங்களில் இரவு வேளைகளில் சுற்றிவளைப்புத் தேடுதல்களை நடத்தும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ
வீரகத்தி பிள்ளையார் கோயில்
யாழ்ப்பாணம்.

# மஹோற்சவம் - 1997

1997 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 24 ஆம் நாள் (06-04-1997) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குத் கொடியேற்ற விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி சித்திரைக் திங்கள் 4 ஆம் நாள் (17-04-1997) வியாழக்கிழமை வைரவர் உற்சவத்துடன் பூர்த்திபெறும்.

மஹோற்சவக்குருக்கள்; சிவப்பிரம்ம ஸ்ரீ
சத்யோஜாத சிவ ராம் கெங்காதரக்குருக்கள்
(சாரதாபீடம் - துன்னாலை)

தேவஸ்தான அர்ச்சகர்: யோ. பிரபாகர சர்மா

கொடியேற்றம் **06-04-97** ஞாயிறு ந.ப. 12-00 மணி
தேர்த்திருவிழா **14-04-97** திங்கள் காலை 8-15 மணி
தீர்த்தம் **15-04-97** செவ்வாய் காலை 8-30 மணி
வசந்தோற்சவம் **16-04-97** புதன் பி.ப. 3-30 மணி

அனைவரும் வருகை தந்து பிள்ளையாரின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

**பிள்ளையார் பணியில் நிற்கும்**
**கோயில் நிர்வாகம்.**

அத்தியடி. (9474)



# புலமைப் பரிசில் '97

30-3-97 இல் எம்மால் எமது நிறுவனத்தில் நடத்தப்பட்ட 17 ஆவது பரீட்சையில்

செல்வன் முத்துலிங்கம் கலையழகன்
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

முதன்மைப் புள்ளி பெற்றமைக்காக பாராட்டுகின்றோம்.

6-4-97 ஞாயிறு 18 ஆவது பரீட்சை வழமைபோல் நடைபெறும்.

பரீட்சைப் பகுதி- **BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (46184)



# வாழ்த்துகின்றோம்

1997 ஆம் ஆண்டுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் 15 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மாவட்டச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள

யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தை

**பாராட்டுகின்றோம்**

இதில் பங்கேற்ற மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களையும் இவர்களை ஒருங்கிணைத்த அதிபரையும் வாழ்த்துகின்றோம்.

- குருநகர் சிறகுவலைச் சங்கம்

[சி/436]


# மரண அறிவித்தல்கள்

## அருட்பிரகாசம் யுஸ்தீனம்மா (முத்தம்மா)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்பிரகாசம் யுஸ்தீனம்மா (முத்தம்மா) மடுவில் காலமாகிவிட்டார் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
அ. மரியநாயகம்
(மகன்)

57, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (46181)

## திருமதிமங்களாதேவி அம்பலவாணர்

யாழ்ப்பாணம் கோயில் வீதி 37 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த திருமதி மங்களாதேவி அம்பலவாணர், 30-03-97 அன்று புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், திருநெல்வேலியைச் சேர்ந்த நடராசா - செல்வநாயகி ஆகியோரின் மூத்த மருமகளும், அம்பலவாணர், அவர்களின் அன்பு மனைவியும், வினோதினி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவநேசன், காலஞ்சென்ற சித்திராதேவி, பத்மநேசன், சிவநேசன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரங்கநாயகி, இரங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31-03-97 அன்று புதுக்குடியிருப்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க. பத்மநேசன்.
(சகோதரன்)

மாவட்டக் காரியாலயம்,
இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம். (46169)

# இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

சுழிபுரம் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட இனந் தெரியாத இளைஞனின் சடலம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் மாலை இளவாலைப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 20 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

கொல்லப்பட்ட இந்த இளைஞன் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-15)

# நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கலும்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வந்த தொடர்பியலுக்கான ஆங்கிலம் என்னும் கற்கை நெறி தொகுதி 12, 13 இன் நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறும்.

புறநிலைப் படிப்புகள் அலகின் பதில் இணைப்பாளர் திரு. பா. இராஜேஸ்வரன் தலைமையில்நடைபெறவுள்ள இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும் பங்கேற்று சான்றிதழ்களை வழங்கவுள்ளனர்.

(இ-4)


**பேராதனை பல்கலைக்கழக முதலாம் ஆண்டு**

## வெளிவாரிப் பரீட்சை

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி முதலாம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக ஏற்கனவே தங்களது பெயர்களை யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பதிவு செய்தவர்களுக்கு 7-4-97 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8. 30 மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகும். பரீட்சைக்குரிய கால அட்டவணைகள் யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பார்வையிடலாம்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் கிடைக்காதுவிடின் பணம் செலுத்திய பற்றுச் சீட்டோடு சமுகம் தந்து யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஒப்படைக்க முடியாதவர்கள் மீண்டும் பணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை ஒப்படைத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

**- பதிவாளர்**

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்காக.

பதிவாளர்
[illegible]
1997-04-04
(சி/440)


# விவசாய உற்பத்தி பொருள்கள் 'மாஹோ' கப்பலில் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஏப். 5

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கின்ற ''மாஹோ'' கப்பலில் விவசாயப் பொருள்களைக் கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக்கப்பலில் புகையிலை வெங்காயம், கடல் அட்டை, பனம் பொருள்கள் ஆகிய, வற்றை ஏற்றி கொழும்புக்கு அனுப்ப விரும்புவோர் இன்று யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன்தொடர்பு கொள்ளுமாறு புனர்வாழ்வுப் பிரிவு நிர்வாக அதிகாரி எஸ். விக்கினேஸ்வரமூர்த்தி கேட்டுள்ளார்.

பெரும்பாலும் கப்பலில் பொருள் ஏற்றும் பணிகள் நாளை மறுதினம் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-3)

# தொலைபேசி இயக்குநர்களுக்கு நிலுவையுடன் சம்பளம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். தொலைத் தொடர் புத்திணைக்களத்தில் பணிபுரியும் 7 தொலைபேசி தொடர்பு இயக்குநர்களுக்கும் ஒரு வருடச் சம்பளம் நிலுவையுடன் வழங்கப்படவிருக்கிறது.

1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 96ஆம் ஆண்டு மே மாதம் வரையான ஒரு வருட காலத்துக்கான சம்பளம் இதுவரை வழங்கப்படாதிருந்தது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. செயலாளர்நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா எடுத்த நடவடிக்கையையடுத்து, சம்பள நிலுவையை வழங்குமாறு தபால் தந்தி, தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

(இ-3)

# நேற்றும் 18 பேர் வந்தனர்

குருநகர், ஏப். 5

வன்னியிலிருந்து குடாக் கடல் ஊடாக நேற்றும் வள்ளம் ஒன்றில் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் குருநகர் வந்து சேர்ந்தனர்.

(இ-51)

# நல்லூர் பிரதேச சபையில் இருந்து ச. ச. நிலையங்களின் ஆவணங்கள் காணாமற் போய் விட்டன

திருநெல்வேலி, ஏப். 5

திருநெல்வேலியிலுள்ள நல்லூர் பிரதேச சபை தலைமைச் செயலகத்தில் கடந்த யுத்த அனர்த்தங்களின் போது சன சமூக நிலையங்களின் ஆவணங்கள் மற்றும் விவரங்கள் காணாமற் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரிவில் 40-க்கு மேற்பட்ட சன சமூக நிலையங்கள் செயற்பட்டு வந்தன.

இவற்றின் நிர்வாகிகள் தமது நிலையத்தின் பதிவு இலக்கம் மற்றும் நிர்வாகிகள் பெயர் விவரம் ஆகியவற்றை உடனடியாக தலைமைச் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விவரங்கள் சமர்ப்பிக்கப்படும் சன சமூக நிலையங்களுக்கு அரச உதவி நன்கொடைப் பணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

# ஞாயிறன்றும் கடைகள் திறந்திருக்கும்

தென்மராட்சி, ஏப். 5

தமிழ்ப் புத்தாண்டு தினத்தையொட்டி நாளை ஞாயிற்றுக்கிழமையும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்துக்கு உட்பட்ட அனைத்து வியாபார நிலையங்களும் திறந்திருக்குமென மன்றத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் தெரிவித்தார்.

(இ-117)


# வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் ஒரு தசாப்த காலம் முக்கிய உறுப்பினராக இருந்து பாடசாலை வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த

பேராசிரியர்

பொ. பாலசுந்தரம்பிள்ளை

அவர்கள்

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அக மகிழ்வோடு வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ வேம்படி மகளிர்கல்லூரி

(சி/442)



# G. C. E. A/L - 97

கணித - உயிரியல் - கலை - வர்த்தக
பிரிவுகள் - எல்லாப் பாடங்களுக்கும்
● பழைய பாடத்திட்டம், ● புதிய பாடத்திட்டம்

முதலாவது - APRIL மாத
மாதிரிப் பரீட்சைகள்
இன்று 5-4-97 இல் ஆரம்பமாகின்றன
நேரில் தோற்ற வசதி இல்லாதவர்கள், தபால் மூலம் தோற்றலாம்.

பரீட்சைப் பகுதி
**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
(46183)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டு வீச்சில் இருந்து தப்ப மொஸ்கோவில் பாதாள மாளிகை

## சி. ஐ. ஏ. அமைப்புத் தகவல்

வாஷிங்டன், ஏப். 5

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ மீது அணுகுண்டுத் தாக்குதல் நடைபெற்றால் நாட்டின் தலைவர்கள் பாது காப்பாகத் தப்புவதற்கு வசதியாக தரைக்கு அடியில் பிர மாண்டமான ஒரு கட்டடத் தொகுதியும் விமானத் தளமும் தப்பிச் செல்லும் பாதையும் அமைக்கும் பணி ஏறக்குறைய முடிவடையும் நிலையில் உள்ளதாக சி. ஐ. ஏ. உளவுத் தகவல்களை மேற்கோள் காட்டி ''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளாக இந்தக் கட்டுமானப் பணி நடைபெற்று வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# அமெரிக்க விமானப் படையில் அதி நவீன தாக்குதல் விமானம்

வாஷிங்டன், ஏப். 05

எதிரியின் ராடார்களின் துல்லியமான கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு குண்டு வீசித்தரையைப் பிளந்து அணுகுண்டுகளை அழிக்கும் திறன் கொண்ட பி - 2 ரக விமானங்களை அமெரிக்கா உத்தியோக பூர்வமாக கடந்த செவ்வாயன்று தனது விமானப்படையில் சேர்த்துக் கொண்டுள்ளது.

தரைக்கு அடியில் வலுவான கிடங்குகள் அல்லது இராணுவ மையங்கள் அமைத்து அதற்குள் அழிவு ஆயுதங்களை எதிரி வைத்திருந்தாலும் தரையைப் பிளந்து உள்ளே போய் தாக்கி அழிக்க வல்ல திறன் கொண்ட குண்டுகளை வீசும் சக்தி கொண்டது இந்த பி- 2 ரக விமானம் ஆகும்.

## உலக அரங்கில்

இந்த விமானத்தின் விலை இலங்கை நாணயத்தில் சுமார் 33 ஆயிரம் கோடிகளாகும். (ஐ-10)

# ஜேர்மன் அதிபர் பதவிக்கு மீண்டும் ஹெல்மட் ஹோல் போட்டியிடுவார்

பொன், ஏப். 5

ஜேர்மனியில் அடுத்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் 5ஆவது முறையாகப் போட்டியிடப் போவதாக ஜேர்மன் அதிபர் ஹெல்மட் ஹோல் அறிவித்துள்ளார்.

பரபரப்பான இந்த அறிவிப்பை தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் அவர் விடுத்தார்.

கடந்த 15 ஆண்டுகாலமாக ஜேர்மன் அதிபராகப் பதவிவகிக்கும் ஹெல்மட்ஹோல் ஐரோப்பாவில் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாக நீண்டகாலம் ஆட்சியில் இருக்கும் அரசியல் வாதியாக விளங்குகிறார்.

கிழக்கு-மேற்கு ஜேர்மனிகளை இணைப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய ஹெல்மட் ஹோலுக்கு அதன் மூலம் பெரும் புகழ் கிட்டியது. ஆனால் இந்த இணைப்பினால் ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் வேலையில்லாதோரின் பிரச்சினைகள் ஆகியன அதிபரின் புகழை மழுங்கடித்துவிட்டன. ஹெல்மட் ஹோலின் செயற்பாடுகள் அவருக்கு சர்வதேச புகழை ஈட்டித்தந்துள்ள போதிலும் அவரது புகழ் உள்நாட்டில் சரிந்துவருவதால் அடுத்த தேர்தலில் அவரின் வெற்றி கேள்விக்குறியாக உள்ளது.

62 வயதான ஹோல் பதவி விலகிவிடுவார் என்ற வதந்திகள் பொன்னில் பரவியிருந்த சமயத்தில் அவரது இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ஐ-10)

# இந்தியாவில் தொடர்ந்து லொறி சேவை நிறுத்தம்!

## இராணுவம் பணிக்கு அழைப்பு!!

புதுடில்லி, ஏப். 5

இந்தியாவில் கடந்த ஐந்து நாள்களாக லொறி உரிமையாளர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தக நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்து வருகின்றன. பால், முட்டை மற்றும் பழவகைகள் என்பன களஞ்சியங்களில் தேங்கிக் கிடக்கின்றன. சந்தைகளில் அத்தியாவசியப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடி நிலையைச் சமாளிக்க இராணுவம் சேவைக்கு அழைககப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் சுமார் 30 இலட்சம் லொறிகள் நாளாந்தம் மாநிலங்களுக்கு இடையே பொருள்களை ஏற்றிச் செல்கின்றன. சுமார் 65 சதவீதமான பொருள்கள் தரைவழியாக லொறிகள் மூலம் இடத்துக்கிடம் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த லொறி உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தேசிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் வேளையில் ஐக்கிய முன்னணி அரசுக்கு புதிய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

லொறி உரிமையாளர்களுக்கும் மாநில முதலமைச்சர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நெருக்கடியைச் சமாளிக்க அத்தியாவசிய சேவைகள் பராமரிப்பு சட்டத்தைப் பயன்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அத்தியாவசிய பொருள்களைத் தடையின்றி கொண்டு செல்ல உதவுமாறு இந்திய இராணுவத்துக்கும் உத்தர விடப்பட்டிருக்கிறது.

# நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு தேவகௌடா தொடர்ந்து முயற்சி

புதுடில்லி, ஏப். 5

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து ஐக்கிய முன்னணித்தலைவர்களுடனும், காங்கிரஸ் தலைவர்களுடனும் தொடர்ந்து பேசிவருவதாகபிரதமர் தேவகௌடா தெரிவித்தார்.

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இறுதி முடிவு எட்டப்படவில்லை என்றும் முன்னணிப் பிரமுகர்ஒருவர்தெரிவித்தார்

அதேவேளை — காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராஜேஸ் பைலட் அப்பலோ ஆஸ்பத்திரியில் உள்ள ஜனதாதள் தலைவர் வி. பி. சிங்குடன் நேற்றுப் பேசினார்.

அதற்கு முன்னதாக ராஜேஸ் பைலட் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியுடன் கலந்து பேசினார்.

ஐக்கிய முன்னணித் தலைவர்களுடன் பேசத்தயாரென தெரிவித்த காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான சரத்பவார், தேர்தலை எதிர்நோக்க காங்கிரஸ் பயப்படவில்லை என்று கூறினார்.

அதேநேரம் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்று வி. ஜே. பி. நேற்று அறிவித்தது. (இ-4)

★ புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகும்

# எல்லைப் பகுதி கிராமங்களுக்கு 'சைரன்' ஒலி எழுப்பும் கருவிகள்

கொழும்பு, ஏப். 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகக்கூடும் எனக் கருதப்படும் கிராமங்களுக்கு எச்சரிக்கை ஒலிகளை எழுப்பும் கருவிகள் (சைரன்) வழங்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் உடனடியாக எச்சரிக்கை ஒலியை எழுப்புவதன் மூலம் மக்களை விழிப்படையச் செய்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாகவே இவை கிராமங்களில் பொருத்தப்படவுள்ளன.

இத்தகைய எச்சரிக்கை ஒலி எழுப்பும் கருவிகளை வழங்கி உதவுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன பொது நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அன்பளிப்பாக இவற்றை வழங்க விரும்புவோரைத் தமது கொழும்பு இல்லத்தில் தொடர்பு கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

எல்லைப் பகுதிகளில் உள்ள 50 கிராமங்களுக்கு ஏற்கனவே இக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

# திடீர்த் தேடுதல்களின் போது கொழும்பில் இருநூறு பேர் கைது!

## புதன்கிழமை இரவு சம்பவம்

கொழும்பு, ஏப். 5

கொழும்பில் பல இடங்களில் நேற்று முன்தினம் காலை பொலிசார் மேற்கொண்ட திடீர்த் தேடுதல்களின் போது இருநூறுக்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் மட்டும் 13 பெண்கள் உட்பட 50 பேர் கைதாகினர்.

தலைநகர் கொழும்பில் நேற்று முன்தினம் இரவு வழமைக்கு மாறாக பலத்த சோதனை நடவடிக்கைகளைப் பொலிசார் மேற் கொண்டனர். வீதிகளில் சென்ற வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டன. பாதசாரிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ)

# 'ராவய' துணை ஆசிரியர் பொலீஸாரால் விசாரணை

கொழும்பு, ஏப். 5

கொழும்பிலிருந்து வெளியாகும் பிரபல சிங்கள வார இதழான ''ராவய'' பத்திரிகையின் துணை ஆசிரியர் ஜெயகுமார் பொலீஸாரால் விசாரிக்கப்பட்டுள்ளார்.

பிலியந்தலையில் உள்ள அவரது வீட்டுக்கு கடந்த வாரம் சென்ற பிலியந்தலைப் பொலீஸார் அவரிடம் துருவித் துருவி விசாரித்தனர் எனவும் வடபகுதி செய்திகளுக்கு ஏன் முக்கியத்துவம் வழங்குகிறீர் எனக் கேட்டதாகவும் தெரிய வருகிறது.

வடபகுதியிலேயே அதிக சம்பவங்கள் இடம் பெறுகின்றன. எனவே தான் அதுபற்றி பத்திரிகையில் எழுதுகிறோம் எனத் தாம் பதிலளித்ததாகவும் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த தகவல் அமைச்சினால் செய்தியாளர் என்ற வகையில் தனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையை தான் பொலிசாருக்கு காட்டினார் எனவும் பி. பி. சியின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் ஜெயகுமார் தெரிவித்தார்.

பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்படும் என தேர்தலின் போது வாக்களித்து—தேர்தலில் வெற்றி பெற்று தற்போது ஆட்சி நடத்தும் பொ. ஐ. முன்னணி ஆட்சியில் இடம் பெற்ற இச் சம்பவம் தனக்கு வியப்பாக உள்ளது என ஜெயகுமார் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

புத்தாண்டை ஒட்டி

# மாஹோவில் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்கள் விநியோகம்

புத்தாண்டை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட மக்களின் நலன் கருதி, கொழும்பிலிருந்து உணவு மற்றும் நாளாந்த பாவனைப் பொருள்களைத் தருவித்து விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிச்சந்தை விலைகளை விடக் குறைந்த விலையில் இப்பொருள்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்படி முதற் கட்டமாக ''மாஹோ'' கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குபகிர்ந்தளிக்கப்பட்டது

சீனி, சர்க்கரை, பயறு, பேரீச்சம்பழம், பால்மா வகை, பிஸ்கட் வகை, தேயிலை, மல்லி, புளி, ரின் மீன் மற்றும் புடைவைவகை, வாளிவகை, பாடசாலைப் பிள்ளைகளுக்கான பைகள், பாட்டா செருப்புகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், அமோனியா உரம், [illegible] தீன் போன்ற பொருள்கள் இவற்றில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 5

தேசிய கல்வி நிறுவன ஆசிரிய கல்வித் துறையினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் 1997 - 98 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ் மொழி மூல மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பூரணப்படுத்திய விண்ணப் பப்படிவத்தை எதிர் வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். இந்துக்கல்லூரி நிலையத்தில் ஒப்படைக்கும்படியும் மேலதிக விவரங்களை இந்துக் கல்லூரி நிலையத்தில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காப்புறுதி பத்திரங்களை புதுப்பிக்க தலைமையகத்துடன் தொடர்பு

## யாழ். பிராந்திய அதிகாரி தகவல்

திருநெல்வேலி, ஏப். 5
தொலைந்து போன காப்புறுதிப் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய காப்புறுதிப் பத்திரங்களை வழங்கவும் —

காலாவதியான காப்புறுதிப் பத்திரங்களுக்கு விசேட சலுகைகள் வழங்கி அவற்றைப் புதுப்பிக்கவும் —

கொழும்பிலுள்ள தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டுள்ளோம்.

இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபன யாழ். பிராந்திய பணிமனையின் உயரதிகாரி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்,

சொந்தக் கட்டடம் சேதமடைந்த நிலையில்-தனியார் வீடு ஒன்றில் போதிய வசதிகள் இல்லாத நிலையில் தற்போது இந்த பணிமனை இயங்கி வருவதாகவும் —

ஊழியர் பற்றாக்குறை, படிவங்களுக்குத் தட்டுப்பாடு ஆகியன நிலவி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

கடந்த 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் எதிர்பாராத இடம் பெயர்வின் போது இப்பணிமனையிலிருந்த பல ஆவணங்களை எடுக்க முடியாது போய்விட்டது. சிலவற்றை மட்டுமே பலத்த ஷெல்வீச்சு, பதற்ற நிலைமைக்கு மத்தியில் எடுக்க முடிந்தது.

முதிர்ச்சியடைந்த காப்புறுதிகளுக்கான கொடுப்பனவுகளைத் துரிதமாக வழங்குவதற்கு ஆளணிப் பற்றாக்குறையும், கொழும்பு தபாற் சேவை சீரற்ற நிலையும் தடையாக இருக்கின்றன. நிதியை பொறுத்தவரை தட்டுப்பாடு எதுவும் இல்லை. கொழும்பிலிருந்து கட்டுநிதி கிடைத்ததும் கொடுப்பனவுகளை வழங்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம். ஆயுள்காப்புறுதிக்கான வேலைகளே தற்போது இப்பணிமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன புதிய ஆயுள் காப்புறுதிக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிமனையில் பிராந்திய முகாமையாளர் பதவி நிரப்பப்படாதுவெற்றிடமாக உள்ளது. ஏற்கனவே ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படவில்லை.

இப்படி அவர் மேலும் கூறினார். [ஐ-135]


# யா/சண்டிலிப்பாய் இந்து ம. வி.

சண்டிலிப்பாய்

முறைசாராக் கல்விப் பிரிவு

**எழுத்தறிவூட்டல் பயிற்சி**

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் இதற்குரிய விண்ணப்பங்களை 09-04-97 ஆம் திகதிக்கு முன்பதாக அதிபருக்கு அனுப்புதல் வேண்டும். நேர்முகப்பரீட்சை 10-04-97 இல் நடைபெறும்.

**அதிபர்**

யா/ சண்டிலிப்பாய் இந்து மகா வித்.
சண்டிலிப்பாய். (சி/434)



# ஆத்ம சாந்தி அஞ்சலி

திருமதி
பவளம் சிவசுப்பிரமணியம் அவர்கள்
[அனித்தா பாடசாலை அதிபர்]

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ
அத்தனையும் இன்று நிஜமாகும் வேளையில்
உங்களை இழந்தோம் மனம் துடித்தோம்.
அழவில்லை கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு
அணையாத ஜோதியென எமக்கு ஒளியேற்றும்
வேளையில் சென்றீரோ!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு அவர்களின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாணவிகள்**
[46173] அனித்தா பாடசாலை.



# கோப்பாய் லயன்ஸ் கழகம்

**55 வயதுக்கு மேற்பட்ட கண் விழிப்படல வளர்ச்சியால் பார்வை இழப்போருக்கான**

## கண் பரிசோதனை முகாம்

மேற்குறித்த முகாம் ஒன்று நாளைய தினம் (06—04—97) ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

**இம் முகாமை கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் S. குகதாசன் அவர்கள் நடத்துவதற்கு முன்வந்துள்ளார்.**

இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது கண் பார்வை இழந்த அனைவரும் நேரத்துக்கு வருகை தந்து பயன் அடையுமாறு கோப்பாய் லயன்ஸ் கழகத்தினர் வேண்டிக் கொள்கின்றனர்.

Lion. Dr. வை. தியாகராசா
தலைவர்
(46175) லயன்ஸ் கழகம் கோப்பாய்.


# சமய சந்நிதிகளில்

நாயன்மார்கட்டு ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த ரதோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (ஐ)

★ ★ ★

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் இலட்சார்ச்சனை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து 6 தினங்கள் நடைபெறவுள்ளது. 12 ஆம் திகதி சனிக்கிழமை பூர்த்தி நாளன்று சுவாமி வீதியுலா இடம்பெறும். (ஐ-28)

★ ★ ★

சிரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாக உள்ளது. (ஐ-28)

★ ★ ★

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (ஐ)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் குருமூர்த்த ஆலயத்தில் தினமும் மாலை 6 மணியளவில் நாட்டு மக்களின் சுபீட்சம் வேண்டி ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த கோளறு பதிகம், இடர்களையும் பதிகம் ஆகிய இரண்டும் ஓதப்பட்டு வருகின்றன.

மக்கள் எல்லோரும் ஏகோபித்து ஒரு மனதாக தினசரி மாலை 6 மணிக்கு இந்த இரண்டு பதிகங்களையும் ஓதும்படி ஆதீன முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார். வீடுகளில் இருந்தபடியே இந்த அரும்பணியை ஆற்றும் வண்ணம் அனைவரையும் அவர் கேட்டுள்ளார். (ஐ)

★ ★ ★

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய கும்பாபிஷேக தினத்தை ஒட்டி எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் சகஸ்ட மஹா சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. நண்பகல் 12 30 மணியளவில் சுவாமி வீதி உலா இடம்பெறும் (ஐ)

★ ★ ★

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ஐ)

★ ★ ★

இளவாலை புனித நீத்தம்மா ஆலயத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் நிறைவடைய உள்ளது. இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்திரு. ஜஸ்ரின் அடிகளாரினால் நற்கருணை ஆராதனை நடந்தேறும். (ஐ 51)


# பல்கலைக்கழக மாணவருக்கான 2 ஆவது படிவம்

பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்படும் இரண்டாவது படிவம் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளது,

மாஹோ கப்பலில் எடுத்து வரப்பட்ட இப்படிவங்களை தபால் மூலம் உரிய மாணவர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-15)


# காரைநகர், மணற்காடு முத்துமாரி அம்பாளின் தேர் உற்சவ தினம்

நாளை (1997-04-06)



எழில்பரையே மணற்புரம் அமர்ந்தவளே!
ஏழாண்டு ஓடியபின் எம்தாயே!
பொழில் சூழ்ந்த உன் பொற்பதிக்கு
புறப்பட்டே வந்தோம் தாயே!
அருள் தந்தே காக்கின்ற அம்மாவே!
அனைவரும் நின்னடி போற்றிட
இருள் அகற்றி எம்மை ஏற்றருள்வாய்
எழிலரசி மணற்புரம் அமர்ந்த தாயே!

பங்குனி உற்சவமே பராசக்தி உந்தனுக்கு
பகலிரவாய் விழாக்கள் நிகரின்றி நடந்திடுமே
எங்களின் துயர்தீர ஏற்றவழி காட்டிடுவாய்
ஏற்றிடவே கொடி, தேர் இழுத்து மகிழ்ந்திடவே
சங்கதி கேட்டிடுவாய் எங்கள் சாம்பவியே!
சந்நிதி காண்பதற்கே நாம் கூடுகின்றோம்
பொங்கிட பூசைவைத்து போற்றி வணங்கிட
புகழரசி எங்களுக்கு ஏற்றவழி வேண்டுமம்மா!

- காரை. எம். பி. அருளானந்தன்

**நாளைய (1997-04-06 ஞாயிறு) தேர் உற்சவதின வழிபாடுகள்**

நன்றே நடைபெற்று நாடு நலம் பெற என்றும் இறைவியை வணங்கி **வாழ்த்துவோர்**

## புஸ்பா நிறுவனத்தார்

**மருத்துவமனை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/435)



# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரை

## பாராட்டி நன்றி நவிலல்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்லண்டன் கிளைத் தலைவரும், இக்கல்லூரியின் முன்னாள் பெருமைக்குரிய அதிபர்களில் ஒருவருமான

**திரு. E. K. சண்முகநாதன்**
அவர்களது பாரியார்
**திருமதி செல்வராணி சண்முகநாதன்**

அவர்களின் யாழ். வருகையை முன்னிட்டு, அவருக்கும், ஏனைய நிர்வாக உறுப்பினர்களுக்கும் எமது கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கு நிதியுதவி வழங்கிய லண்டனைச் சேர்ந்த ஏனையோருக்கும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, லண்டன் கிளைத் தலைவரை வரவேற்பதிலும் பேருவகையடைகின்றேன்.

**டாக்டர் வை. தியாகராசா**
பழைய மாணவனும்,
பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினரும்.

'ராஜஸ் தான்',
இருபாலை, கோப்பாய். (46178)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கூட்டுறவு அடிப்படையில் 40 செயல்திட்டங்கள்

## விரைவில் செயற்படுத்த முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 5

குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்குடன், கூட்டுறவு அடிப்படையிலான செயல் திட்டங்களை உருவாக்கி அமுல்படுத்த வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மக்களின் புனர்வாழ்வு, மனையிடங்கள் புனரமைப்பு, பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வு, சுயவேலை வாய்ப்பு, வருமான அதிகரிப்பு, சமூக நல வசதிகளை மேம்படுத்தல் ஆகியன இத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும்.

யாழ். மாவட்டத்தில் பல இடங்களிலும் 30 முதல் 40 வரையிலான இத்தகைய திட்டங்களை இனங் கண்டு அமுலாக்க வேண்டிய, பொருத்தமான ஆய்வுகளை மேற்கொண்டு திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு வசதியாக இரண்டு நாள் ஆய்வுப்பட்டறை ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர் வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடத்தப்படவிருக்கும் இந்த ஆய்வுப்பட்டறையில் கலந்து கொள்ள வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், கூட்டுறவுக்கல்லூரி அதிபர் செ. கனகசபாபதி ஆகியோர் திருமலையில் இருந்து இங்கு வருகை தரவுள்ளனர். அத்துடன் வள ஆளணியினராகக் கடமையாற்ற யாழ். அரச அதிபரின் பிரதிநிதியாக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர், மற்றும் கால் நடைவளர்ப்பு சுகாதாரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், சிறு கைத் தொழில் திணைக்களம் ஆகியனவற்றின் பிரதி நிதிகள், உதவிப் பணிப்பாளர்கள், கடற்றொழில் விவசாய உத்தியோகத்தர், மக்கள் வங்கிப் பிராந்திய அலுவலகப் பிரதி நிதி ஆகியோரும் அழைக்கப்படவுள்ளனர்.

இக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் முகவர்களாகச் செயற்படவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிக் கூட்டுறவுச்சங்கங்கள், மாவட்டமட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கால் நடைவளர்ப்பு, நெசவாளர், மட்பாண்ட, தச்சுத்தொழிலாளர், கைத்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளையும் அதில் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

கருத்திட்டங்கள் பொதுவாக விவசாயம், உப உணவு உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, நெசவு ஆடை உற்பத்தி, தையல்வேலை, பின்னல் வேலை, வாழ்விடங்கள் புனரமைத்தல், புதிதாக அமைத்தல், சுகாதார வைத்திய வசதி, சுதேச மருத்துவ உற்பத்தி, போக்குவரத்துச் சேவை, பாதணி உற்பத்தி, தும்புத் தொழில், மட்பாண்டத் தொழில், கடற்றொழில், போசாக்கு உணவு தயாரித்தல், பழவகை உற்பத்தி, பன்னவேலை, எரிவாயு உற்பத்தி போன்ற துறைகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

# தொழிற் பேட்டைகளை உருவாக்க கூ. சங்கங்கள் முயல வேண்டும்

## ஆணையாளர் தெரிவிப்பு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை வெறும் பங்கீட்டுப் பொருள்ளை விநியோகிக்கும் நிலையமாக இயங்கவிடாமல் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி அப் பகுதியை தொழிற்பேட்டைகளாக மாற்றும் பொறுப்பு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தினரிடமும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இவ்வாறு தொழிற் பேட்டைகள் அமையுமாயின் எமக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களை குறைந்த விலையில் பெறுவதுடன் சங்கத்தின் வளர்ச்சியும் பன்மடங்கு அதிகரிக்கும்.

பளை பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ. கு. சண்முக நாதன் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் புதனன்று நடைபெற்ற இக் கூட்டத்தில் தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் கு. சுப்பிரமணியம், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் சி. ஐயாத்துரை, கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் ச. யோகராசா உட்பட பலர் உரையாற்றினர்.

புதிய இயக்குநர் சபைத் தெரிவும் இடம் பெற்றது. (ஐ-117).

# 6 அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கி உதவக் கோரிக்கை

திருநெல்வேலி, ஏப். 5

யாழ். சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள முக்கிய அரசினர் வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்காக ஆறு அம்புலன்ஸ் வண்டிகளைத் தந்து உதவுமாறு யாழ். சுகாதாரத் திணைக்களம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு அரசாங்கம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்துக்கு ஊடாக அம்புலன்ஸ் வண்டியொன்றை அண்மையில் யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு வழங்கியிருந்ததும், அந்த அம்புலன்ஸ் வண்டி சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் சேவையிலீடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-135)

## குடாக்கடல் ஊடாக குருநகருக்கு

# வன்னியில் இருந்து வந்த பெண் காய்ச்சலினால் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 5

வன்னிப்பகுதியில் நீண்ட நாள்களாகக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பூரண சுகம் அடையாதநிலையில் யாழ். திரும்பி மீண்டும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் அங்கு மரணமானார்.

இவர் கடந்த திங்கட்கிழமையே வன்னியில்இருந்து படகு மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தாகத் தெரிவிக்கப்பட்டது.

குருநகரைச் சேர்ந்த சவுரியான் ஜெனிஸ்டா (வயது26) என்றஇளம் பெண்ணே உயிர் இழந்தவராவார். (ஐ-15)

# 50 ஆயிரம் பேர் இதுவரை வவுனியாவுக்குள் வந்தனர்

வவுனியா, ஏப் 5

வன்னிப்பகுதியில் இருந்து இதுவரை சுமார் 50 ஆயிரம் பேர் வவுனியாவுக்குள் வந்துள்ளார்கள். இவர்களில் சுமார் 25 ஆயிரம் பேர் திருகோணமலை ஊடாக யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். இன்னமும் 14 ஆயிரம் பேர் கொழும்பு மற்றும் வெளிநாடு செல்வதற்காக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

வவுனியா செய்தியாளர் ஒருவர் மேற்கண்ட தகவல்களை பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள 11 நிலையங்களில் மக்கள் பெரும் நெருக்கடி நிலையில் வாழ்கிறார்கள்.

இவர்களில் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளில் பணியாற்றும் அரச ஊழியர்களும் உள்ளனர்.

இங்குள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க வவுனியா அரச அதிபர் தலைமையில் நால்வர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு சில சிபார்சுகளைக் செய்திருந்தது. ஆனால் அவை இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்று அவர் தெரிவித்தார். (இ-3)

# கைதானோர் அரச அதிபரிடம் ஒப்படைப்பு

நவாலி, ஏப். 5

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 9 பேர் யாழ். அரச அதிபரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டனர்.

சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து கிளிநொச்சிக்குச் சென்ற இவர்கள் கடந்த 29 ஆம் திகதி கைதாகி இருந்தனர். (இ-100)

# கோப்பாயில் கண்சிகிச்சை முகாம்

உரும்பிராய், ஏப். 5

கோப்பாய் லயன்ஸ் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8. 30 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. 55 வயதுக்கு மேற்பட்ட, கண்களில் விழிப்புலன் படலத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் இதில் பங்கு பற்றிப் பயனடையுமாறு கோரப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி திரு. எஸ். குகதாசன் இப்பரிசோதனையை நடத்துவார்.

# செய்திச் சாரம்

## எட்டு பெண்களுக்கு தையல் மெசின்கள்

தென்மராட்சி, ஏப். 5

கொழும்பு சமூக சேவைத் திணைக்களத்தினால் எட்டு தையல் இயந்திரங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத் தையல் இயந்திரங்கள் இப் பிரதேசத்தில் உள்ள குடும்பத் தலைவனை இழந்த எட்டுப் பெண்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-117)

## பளை பிரதேசசபை அலுவலகம் புனரமைப்பு

தென்மராட்சி, ஏப். 5

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்களில் சேதமடைந்திருந்த பளைப் பிரதேச சபை தலைமை அலுவலகம் 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப் பட்டுள்ளது.

இப் புனரமைப்புக்கான நிதி இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் சபை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டதாக பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை பளைப் பிரதேச செயலக கட்டடமும் திருத்தம் செய்யபட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது. இதற்கான நிதி பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## வைக்கோல் தட்டுப்பாடு

கொழும்புத்துறை, ஏப்.5

குடாநாட்டில் என்றுமில்லாத வகையில் வைக்கோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு பெரும் போக நெற் செய்கை பாதிக்கப்பட்டதே வைக்கோல் தட்டுப்பாடு ஏற்படக் காரணமாகியுள்ளது. இதனால் கால் நடை வளர்ப்பாளர் [illegible] பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-30)

## பாடசாலைகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி, ஏப். 5

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 13 பாடசாலைகளுக்கு அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், மனையியல் பாட உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன அப்பகுதிப் படை அதிகாரியினால் வழங்கப்படவுள்ளன.

இந்த உபகரணங்களை பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் இடம் பெறும். (ஐ-117)

## சங்கானையில் மகப்பேற்று பிரிவு

திருநெல்வேலி, ஏப்.5

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் 24 படுக்கைகளைக் கொண்ட புதிய மகப்பேற்று வார்ட் விரைவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கென பத்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-135)

## ஞாபகார்த்த கட்டடங்கள்

சுழிபுரம், ஏப். 5

பண்ணாகம் அண்ணா கலை மன்றத்துக்கு புதிய அலுவலகக் கட்டடம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. அத்துடன் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வடமேற்கு உட் சுற்றுப்பிரகார வீதி மண்டபமும் கட்டப்படவுள்ளது. பண்ணாகம் அமரர் பெ. கனகரத்தினம் ஞாபகார்த்தமாக இவ் விருகட்டடப்பணிகளும் சுமார் 4 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-28)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். பல்கலைக் கழகப் பதிவாளராக நியமனம் பெற்றுள்ள கலாநிதி க. குணராசாவுக்கு கொட்டடி சனசமூக நிலையத்தினர் பாராட்டு விழா ஒன்றை நடத்தினர். நிலையத்தின் காப்பாளர் திரு. ஆ. சி. பரமசாமி, கலாநிதி குணராசாவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ-15)

## புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களிடையே உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், போர்த் தேங்காய் அடி ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் எழுத்து மூலமான விண்ணப்பங்களை 7 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேசச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## சாவகச்சேரியில் தையற் பயிற்சி நிலையம்

சாவகச்சேரி காளிகோயில் வீதியில் புதிய தையற் பயிற்சி நிலையம் ஒன்றை தென்மராட்சி பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

பதில் பிரதேச செயலாளர் கே. கேதீஸ்வரன் இதனை கடந்த புதனன்று திறந்து வைத்தார். (ஐ-31)

## குண்டும் குழியுமாக பறாளை வீதி

சுழிபுரம், ஏப். 5

சுழிபுரம் பிரதான வீதியில் இருந்து பறாளை விநாயகர் முருகன் கோயிலுக்குச் செல்லும் வீதி குண்டும் குழியுமாக காணப்படுகிறது. வீதியைத் திருத்த அப் பகுதியில் கற்கள் பறிபட்டு நீண்ட காலமாகியும் வீதி இன்னமும் திருத்தப்படவில்லை. (ஐ-28)

## திருவாய் மொழி பிரசுரங்கள்

சுழிபுரம், ஏப். 5

பொன்னாலை அறிவு வளர்ச்சிக்கழகத்தினர் திருவாய்மொழி - நம்மாழ்வார் பாடற் பிரசுரங்களை அச்சிட்டு பொதுமக்களுக்கு விநியோகித்து வருகின்றனர். (ஐ-28)

## ஆலயத்துக்கு ஜெனரேற்றர்

சுழிபுரம், ஏப். 5

பறாளை விநாயகர் முருகன் ஆலயத்தின் பாவனைக்கென பறாளை தொண்டர் சபையினர் புதிய ஜெனரேற்றர் ஒன்றை அண்மையில் கொள்வனவு செய்துள்ளனர். (ஐ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாவாந்துறையைச் சேர்ந்த நாகேஸ்வரன் சற்குணானந்தன் ஆகியஎனது0901010044 இலக்க விசேட அடையாள அட்டை, பனை பஸ்ஸில் நாவற்குழிக்கும், தபாற் கட்டைச் சந்திக்கும், இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி கிளை 2 இல் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். [சி/424]

கஜந்தி ராஜகுலேந்திரன் ஆகிய எனது இரு அடையாள அட்டைகள், (0905003113) மானிப்பாய், இலங்கை வங்கிக்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் மாக்கற் லேன், மானிப்பாய் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [46165]

குபேந்திரராஜா பூங்கோதை என்பவருடை துணிமணிகள் கோயில்மணி அடங்கிய நீல நிற பயணப்பொதி 18-03-97 இல் யாழ். வந்த கப்பலில் தவறிவிட்டது. தயவு செய்து மேற்கண்ட பயணப் பொதியை கண்டெடுத்தவர்கள் 310 ஆஸ்பத்திரி வீதி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (46172)

குருநகரைச் சேர்ந்த இ.யூ. பி. அன்ரன் என்பவருடைய உணவு முத்திரை 31-3-97 இல் குருநகரில் தவறிவிட்டது, தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 23/8 மத்திய கிழக்கு வீதி, என்ற முகவரியுடன் அல்லது J/68 கிராம சேவையாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும். (46170)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: காலை 8.30 மணி வரை(ஞாயிறு 12மணி வரை) இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். [9444]

இறைச்சிக் கோழி (புறொயிலர்), விற்பனைக்குண்டு. ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: Lucky Farm, Sales Centre Palaly Road Thirunelvely. [9471]

இறைச்சிக் கோழி புறொயிலர் (Broiler) விற்பனைக் குண்டு. தொடர்பு:- 141, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (46171)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக் குண்டு. 1 Kg 150/- வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவுவழங்கப்படும். இல,101 இலுப்பையடிச் சந்தி அருகாமை, பலாலி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். [46163]

### விற்பனைக்கு

ஒரு நாள் பிறீமா புறொயிலர் குஞ்சுகள், ஓடர்களுக்கு தொடர்ந்து எடுத்துக் கொடுக்கப்படும். அதற்குரிய மருந்து வகைகளும் இலவசமாகவழங்கப்படும். சித்திரை மாதத்துக்குரிய ஓடர்கள் பதியப்படுகின்றன. தொடர்பு:- சுப்பறாங், பலாலி வீதி, திருநெல்வேலி. [46135]

20 அங்குலம் கொண்ட (Sony) சொனி கலர் தொலைக்காட்சிப் பெட்டி (ரிமோட் கொன்றோல்) புதிய பனை மரங்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும், முகவரி:- செ. சுதாகரன், முத்துமாரிஅம்மன்வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. [சி/418]

ரியூட்டரி வாங்கு, மேசை, கொட்டகை, வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக் குண்டு. உடன் தொடர்பு கொள்க; 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். [46167]

### காணி விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில், கல்விக் கந்தோருக்கு அருகாமையில், நன்னீர்க் கிணறு, மலசல கூடத்துடன் $1\frac{1}{4}$ பரப்புக் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு:- இ. நாதன், 36, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். [46128]

விசேட அடையாள அட்டை ரூபா 35/-
அடையாள அட்டை ரூபா 35/-
எல்லா அளவு கறுப்பு வெள்ளைப் படங்களுக்கும் நாடவேண்டிய இடம்:

**த ஸ்ருடியோ**
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(46132)

## பொன்னான வாய்ப்பு
### அஷ்டலக்ஷ்மி தினத்தாள் புளொக்

சகாயவிலை ரூபா **50/-**
(**1-4-97** தொடக்கம் **14-4-97** வரை)
எல்லா விவரங்களும் அடங்கிய கொம்பியூட்டர் கொழும்புத் தயாரிப்பு.

கிடைக்குமிடங்கள்:

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி.
சிவசக்தி அறிவொளி புத்தக நிலையம்
கைதடிச் சந்தி. (46088)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 24 — 11 — 1963



இறப்பு: 15 — 03 — 1988

### செல்வி நவரத்தினம் லோகேஸ்வரி (தேவி)

திதி: 05 - 04 - 1997

பாசத்தின் ஒளிவிளக்காய் பாரினில் வந்துதித்து
தேசம் மகிழ இன்று தேன்மொழி பயின்று நின்றீர்
வாசமலர் வாட இங்கு காதல் பொய்த்ததுவே!
வாழ்ந்தது போதுமென்று கூற்றுவனை
அழைத்து நின்றீர்
ஒன்பதாண்டுகள் போனதுவே என்றும்
உம் நினைவுகள் எம் மனதில்.

— குடும்பத்தினர்

தனங்கிளப்பு,
சாவகச்சேரி. (46134)

## நினைவூட்டுகிறோம்
## புது வருடத்தை முன்னிட்டு
# மகா நதி யின்

மாபெரும் சிறப்புத்தள்ளுபடி விற்பனை
10% முதல் 20% வரையிலான சிறப்புக்கழிவு
இத்தள்ளுபடி 18-4-97 வரை மட்டுமே!
இன்றைய தலைமுறையினருக்கேற்ப
இறக்குமதி செய்யப்பட்ட

- () திருமணப்பட்டுச் சேலைகள், பட்டு வேட்டிகள்
- () ஆடவர்களுக்கேற்ற அழகான டிசைன்களில் T சேட், சேட், றெடிமேட் றவுசர், சூட்டிங் வகைகள்
- () மங்கையர்களுக்கேற்ப அழகான டிசைன்களில் ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண், புதிய சாறிவகைகள் (இந்தியன், முத்து, காதல்கோட்டை, ஒளவைசண்முகி, தேவராகம், அருணாச்சலம்) மேலும் புதிய சாறி வகைகள்
- () சிறுவர், சிறுமியர்களுக்கேற்ப கண்கவர் சிங்கார ஆடை வகைகள்

**மற்றும்**

சகலவிதமான ரவிக்கைதுணிவகைகளுக்கும், பட்டசில்க், யோயோ, இன்ரகூலர் பிறின்ட், பிளேன், வாபிறா போன்ற துணி வகைகளுக்கும்

# மகா நதி புடைவை அகம்

சாவகச்சேரி. (46158)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முருகேசு இரத்தினம் (J.P)

அன்னைமடியில்: 17 - 06 - 1920
ஆண்டவன் அடியில்: 17 - 03 - 1996

திதி: 05 - 04 - 1997

ஒளி தந்து எரிகின்ற மெழுகுவர்த்தியாக வாழ்ந்து
எம்மை எல்லாம் வளமுடன் வாழ வழி நடத்திய
எங்கள் அன்புத் தந்தையே!
மீளாத்துயரில் எம்மை நீந்தவிட்டு மௌனமாய்
பறந்ததென்ன? வான் வெளியில் நியாயம் தானா?
ஆண்டு ஒன்று சென்றாலும் உம்மை
நிமிடமேனும் மறக்கமுடியவில்லையே ஐயா!
உமது உடைபோல் உமது மனமும்
வெள்ளை என்பதால் தானோ இறைவன் விரும்பி
உம்மை தன்னிடம் அழைத்துக் கொண்டான்.

உமது ஆத்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற நாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோட்டைக்காடு,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (46151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நல்ல ஆரம்பம்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், போருக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்ற உண்மையான விருப்பமுள்ள சகலருக்கும் ஒரு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, தென்னிலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒருங்கிணைந்து, ஒரே அணியாகச் செயற்பட இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் கண்டுள்ள இந்த இணக்க நிலை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

இதுவரையில் தென்னிலங்கையின் பிரதான தலைவர்களாகப் பணிபுரிந்து நாட்டை வழி நடத்திய அரசியல்வாதிகளுக்குப் பிறவாத தேச நலன் இவர்கள் இருவருக்கும் உதித்திருப்பது நாட்டுக்கு நல்ல காலம் தொடங்கிவிட்டது என்பதற்கான நற்சகுனமே.

இனப்பிரச்சினைக்குத் தீர்வின்றி, போர் மூண்டு நாடு இப்போதைய மோசமான நிலையை அடைவதற்கு முந்திய தென்னிலங்கை அரசியல் தலைவர்களே காரணகர்த்தாக்கள். இனப் பிரச்சினை ஒரு தேசிய விவகாரம் என்று மேடைகளில் பேசிக்கொண்டே, கவர்ச்சிகரமான அறிக்கைகளை விடுத்துக்கொண்டே, தமது கட்சி நலனையும், அரசியல்லாபத்தையும் முன்னிறுத்தியே அவர்கள் அனைவரும் விதிவிலக்கின்றிச் செயற்பட்டு வந்தார்கள். தமிழர் பிரச்சினையை முதலாக வைத்து தாம் ஆட்சிபீடம் ஏறமுயன்றார்கள், அதிகாரத்தைப் பிடித்தும் கொண்டார்கள்.

எதிர்க்கட்சி என்றால் அரசாங்கம் செய்வதை எதிர்த்து அதற்கு இடையூறு விளைவித்து அரசியல் லாபம் தேடுவதே சித்தாந்தமாகச் செயற்பட்டனர். அதுவே அத்தலைவர்களுக்கும், கட்சிகளுக்கும் தொடர்ந்து அரசியல் வாழ்வளித்தன; சக்தி கொடுத்தன.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களின் அரசியல் அபிலாசைகளை எந்தளவுக்கு, எந்த வகையில் வழங்குவதற்குத் தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளும் தயாராக உள்ளன என்ற இணக்க நிலை வரவேண்டும். அதுவே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்பப்படி — என்பதனை இப்பத்தியில் மிகப் பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளோம்.

அந்த அரிய ஆரம்பம் இப்போது வந்திருக்கிறது. கட்சி நிலைக்கு அப்பாற்பட்டு நின்று இனப்பிரச்சினையைத் தீர்க்க முயல்வதற்கு அவர்கள் எடுக்கும் சகல முயற்சிகளும் வெற்றி பெற வேண்டும் என்பதே இந்நாட்டின் பெரும் பகுதி மக்களின் விருப்பமாக இருக்கும்.

எப்போதுமே இல்லாது போய் விடுவதைவிட மிகப் பிந்தியாவது இத்தகைய ஒரு நிலை எட்டப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. சந்திரிகாவும் ரணிலும் எழுத்தில் வடித்ததை செயலில் காட்டினால் அவர்கள் நிச்சயம் இலங்கை அரசியலில் திருப்பு முனையைத்தோற்றுவித்த வரலாற்றுத் தலைவராவர்.

# விமான - கப்பல் பயணிகளுக்கு சிவில் நிர்வாகம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 5

கப்பல் மற்றும் விமானம் மூலம் வெளி மாவட்டங்களுக்குச் செல்ல யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களுக்குச் சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

**விமானம்**

விமானம் மூலம் செல்லப் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 204 முதல் 212 வரை உள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாகவும் —

பட்டியல் இலக்கம் 212 முதல் 271 வரை உள்ளவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாகவும் —

பட்டியல் இலக்கம் 278, 293 இல் உள்ளவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாகவும் — பயணம் செய்ய வேண்டும்.

அக் குறிப்பிட்ட திகதிக்குள் பயணம் செய்யத் தவறின் பின்னர் பயணம் செய்ய புதிதாக விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டும்.

**கப்பல்**

பட்டியல் இலக்கம் 524, 525, 527, 530, 531, 533, 536, 537, 538, 540 ஆகியவற்றில் உள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாகவும் —

பட்டியல் இலக்கம் 541, 542, 543 ஆகியவற்றில் உள்ளவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாகவும் —

பட்டியல் இலக்கம் 544, 545, 546 ஆகியவற்றில் உள்ளவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாகவும் —

பட்டியல் இலக்கம் 547, 548, 549, 550, 551 ஆகியவற்றில் உள்ளவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாகவும் — பயணம் செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட திகதிகளுக்குள் பயணம் செய்யத் தவறின் பின்னர் பயணம் செய்யப் புதிதாக விண்ணப்பம் செய்ய வேண்டும். (இ-3)

## கமக்காரர் ஓய்வூதியத்திட்டம்: பணம்செலுத்த கால எல்லை நீடிப்பு

கமக்காரர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில்இணைந்துகொண்டவர்களில் தொடர்ந்து 5 தவணைப்பணங்களை தொடர்ச்சியாகக் கட்டத் தவறி உறுப்புரிமை இழந்த பயனாளிகளுக்கு மீண்டும் திட்டத்தில் அங்கம் வகிக்க வசதியாக தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கான கால எல்லை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பணத்தைக் கட்டத் தவறிய விவசாயிகள் இக் கால எல்லைக்குள் தமது தவணைப்பணங்களை நல்லூர் கமநலச் சேவை நிலையத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அலுவலகத்தில் செலுத்தி தங்களின் உறுப்புரிமையை வலு உள்ள தாக்கிக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ★ நாலந்த கொலையை அடுத்து
## கட்டாய லீவில்சென்ற அதிகாரி அரசு மீது வழக்குத் தாக்கல்

இரத்தினபுரி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவின் படுகொலையைத் தொடர்ந்து கட்டாய லீவில் அனுப்பப்பட்ட சப்பிரகமுவ மாகாணபிரதிப் பொலீஸ்மா அதிபர் நிமால் ஜெயசுந்தர அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

தாம் கட்டாய லீவில் அனுப்பப்பட்டமை அடிப்படை மனித உரிமையை மீறிவிட்ட செயல் எனக் கோரி, லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி அவர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதி மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா இம்மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். (ஐ-3-150)

## மின் மாற்றிகளுக்கு படையினர் இரவு பகலாகப் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 5

காரைதீவில் உள்ள மின்மாற்றிகளுக்கு அதிரடிப்படையினர் இரவு பகலாகப் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். கடந்த ஞாயிறன்று இப்பகுதியில் மின் மாற்றி ஒன்று தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்தே இப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மின் மாற்றி தகர்க்கப்பட்டதால் காரைதீவு பொது மருத்துவமனைக்கான மின் விநியோகம் கடந்த பல நாள்களாகத் தடைப்பட்டிருக்கிறது. (ஐ)

## ஐ. நா. சனத்தொகை நிதியம் நடத்தும் சுவரொட்டிப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 5

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம் (UNFPA) ''உலகில் எமது குடும்பங்கள்'' என்ற தலைப்பில் சர்வதேச சுவரொட்டிப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

சகல நலன்களும் கொண்ட உறுதியான சமுதாயத்தின் அங்கமாக ஏதேனும் ஒரு வடிவில் ஒரு குடும்பம் கொண்டிருக்கவேண்டிய அம்சத்தைச் சுவரொட்டி வரைவுகள் வெளிப்படுத்த வேண்டும். வடிவமைப்புகள் குடும்ப அமைப்புகள், கல்வி, சமூகம், அபிவிருத்தி ஆகிய விடயங்களில் ஒன்றை அல்லது பலவற்றைக் கொண்டிருக்கலாம்.

இந்தப் போட்டி 6 — 8, 9 — 12, 13 — 15, 16 — 18, 19 — 30 வயதுடையவர்களைக் கொண்ட பிரிவுகளின் அடிப்படையில் நடத்தப்படும். 1997 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதியன்று உள்ள வயதின் அடிப்படையிலேயே பிரிவுகள் அமையும்.

இப்போட்டிக்கு முதற்பரிசாக 7,500 ரூபாவும், இரண்டாம் பரிசாக 5,000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 3,000 ரூபாவும் வழங்கப்படும்.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஓவியத்தையும் சமர்ப்பிக்க முடியும். எவ்வாறாயினும் பரிசுகள் ஒரு ஓவியத்துக்கு மாத்திரமே வழங்கப்படும்.

ஒவ்வொரு சுவரொட்டியின் பின் பக்கத்திலும் பெயர், பாடசாலையின் விலாசம், தனிப்பட்ட விலாசம், வயது, பிறந்த திகதி மற்றும் வயது பிரிவு ஆகிய விவரங்கள் தெளிவாக ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும். பாடசாலைச் சிறுவர்களின் ஓவியங்கள் பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

பாடசாலை சாராத ஓவியர்களும் இப்போட்டியில் பங்குபற்றலாம். எனினும் அவர்கள் வெற்றிபெற்றால் பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மூலம் தமது வயதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஓவியங்கள் 22'' x 18'' அளவைக் (பிறிஸ்டல் போட்) கொண்டிருத்தல் வேண்டும். பெயின்ட், வண்ணக்குச்சி, பென்சில் அல்லது வேறு பொருத்தமான பொருள்களைப் பயன்படுத்தலாம்.

எல்லாச் சுவரொட்டிகளும் ''Director, Population Information Centre (PIC), 251, De Seram Place, Colombo - 10'' என்ற முகவரிக்கு 21-04-1997 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும். (ஐ-10)

## ஐ. நா. அபிவிருத்திப் பணிகள் தென்மராட்சியில் பூர்த்தி

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் 15 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

கைதடி மேற்கில் மூன்றரை லட்சம் ரூபா செலவில் அம்பத்தை உப்பு நீர்தடுப்பு அணைக்கட்டும் மட்டுவில் வடக்கில்5லட்சம் ரூபா செலவில்உப்புநீர் தடுப்பு அணைக்கட்டும், மந்துவிலில் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் கேலம் வெள்ள வாய்க்கால் திருத்தமும், வரணியில் 4 லட்சம் ரூபா செலவில் நூல் நிலைய நிர்மாணித்தலும், தளபாடங்கள், புத்தகங்கள் கொள்வனவு செய்தலும் இதன் மூலம் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த அபிவிருத்தி வேலைகள் அந்தந்தப் பகுதி மக்களின் உதவியுடன் செய்து முடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## ஒத்தி வைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

கம்பர்மலை அ. த. க.பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் இன்று சனிக்கிழமை நடத்தப்படவிருந்த ''பூபாளராகங்கள்'' நிகழ்ச்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## சாரணர் கூட்டம்

குருநகர், ஏப். 5

யாழ். மாவட்ட சாரணர் தலைவர்களுக்கான கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் பிரதி சாரண ஆணையாளர் டோறஸ் இராசசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது

உதவி மாவட்ட ஆணையாளர்கள், குழுச் சாரணத் தலைவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-51)

## நாளை

**பங்குனி 24**

ஞாயிற்றுக்கிழமை

திதி: சதுர்த்தசி

மாலை 7.09 வரை.

நட்சத்திரம்:உத்தரட்டாதி

பின்இரவு 4.41 வரை.

சுபநேரம்: 9.08-10.38

ராகுகாலம்: 4.38 6.08

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தமிழ் நாட்டில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

இந்தியாவில் தமிழ் நாடு உட்பட ஒரு சில மாநிலங்களில் லொறி உரிமையாளர்கள் தங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளனர். சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களுடன் தமது கோரிக்கைகள் தொடர்பான பேச்சுக்களில் இணக்க நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டிருக்கிறது.

வரி விலக்கு அளிப்பது உட்பட பல கோரிக்கைகளின் பேரில் இந்தியாவின் பல மாநிலங்களில் இந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. (முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்) (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

கோண்டாவில் கிழக்கு சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெறும். (இ-4)

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரிய ஆலோசகர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சை இன்று சனிக்கிழமை காலை நடைபெறும். (இ-152)

## பஸ் நிலையத்தில் விபத்து; பெண் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இடம் பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

பஸ்ஸுக்காகக் காத்து நின்றவரும் வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்தவருமான கணேஸ் சரஸ்வதி (வயது 47) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு நிதி உதவி

தென்மராட்சி, ஏப். 5

பளைப் பிரதேசத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் நிதி உதவிகள் அந்தந்தக் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் அபிவிருத்தி வேலைகளை மேற் கொள்ளப் பயன்படுத்தப்படவுள்ளன.

இப் பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராமிய அபிவிருத்திச் சங்கங்களையும் புனரமைத்து புதிய நிர்வாகத்தினர் பற்றிய விவரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பலில்..


(முதலாம் பக்கத் தொடர்)
விருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களின் பட்டியல் இலக்கம் 203 முதல் 559வரை உள்ளவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## சந்திரிகா. .

(முதலாம் பக்கத் தொடர்)
இலங்கை அரசாங்கமும் எதிர்க் கட்சியும் தமது கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டின் நலன்களை முன்வைத்திருப்பது பாராட்டுக்குரியது என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டொனர் தெரிவித்தார். (இ-4-3)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் ஆ. வ. தங்கராசா (தங்கம்)
(ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி)

தோற்றம்: 30 - 12 - 1929 மறைவு: 17 - 03 - 1996

திதி: 05 - 04 - 1997

பெயரில் மட்டுமல்ல உள்ளத்திலும் தங்கமாய் வாழ்ந்து பலகோடி உள்ளங்களைப் பாசத்தால் கொள்ளை கொண்டு அன்பின் உருவாய் பண்பின் சிகரமாய் நேசமுள்ள துணைவனாய் பாசமுள்ள தந்தையாய் அருமைமாமனாய் ஆருயிர்ப் பேரனாய் நின்று எமக்கெல்லாம் நல்வழிகாட்டி நாமெல்லாம் அவ்வழி செல்ல தோள் தந்த தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு உடலால் பிரிந்தாலும் இவ்வுலகில் நாம் உள்ளவரை எம் உள்ளங்களில் அழியாது உங்கள் நினைவு.

தங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேர்த்தி.

கோயில் கடவை,
கரவெட்டி. (46121)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் பாக்கியலட்சுமி

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரான ஆறுமுகம் பாக்கியலட்சுமி 04- 04- 97 இல் காலமானார்.

அன்னார் A. R. ஆறுமுகம் (அத்தியடி) அவர்களின் அன்பு மனைவியும், லலிதா (U. K), தேவதாசன் (தொழில்நுட்பவியலாளர், மட்டக்களப்பு) ஜெகதீசன் (சட்டத்தரணி, மாலைதீவு) நந்தினி (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை) றேணுகா ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. சதாநந்தன் (U. K), சந்தானலட்சுமி, றோகினி, சிறீகாந்தா (பொறியியலாளர், கட்டிடத் திணைக்களம், யாழ்ப்பாணம்) சிறீகுமரன் (படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (5- 04- 97) சனிக்கிழமைநடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1. 00 மணிக்கு திருநெல்வேலிஇந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;
A. R. ஆறுமுகம்
(கணவர், பிள்ளைகள்)

203, (71) பலாலி வீதி,
கந்தர்மடம். (46185)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

## கூட்டம்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர். இவர்களை வரவேற்கும் முகமாக நாளை காலை 9.30 மணியளவில் கிளைக் குழுக் கூட்டம் அங்கு நடைபெறவுள்ளது. (ஐ)

## பெண்களை...

(முதலாம் பக்கத் தொடர்)
வேளையில் பெண்களைவிசாரணைக்காக அழைத்துச் செல்வது பொதுமக்கள் மத்தியில் பாதுகாப்புப் படையினர் மீது வெறுப்பும் விசனமும் ஏற்பட வழிசெய்யும். எனவே பெண்களை விசாரணைக்குஉட்படுத்தும்போது பெண் அதிகாரிகளைஈடுபடுத்துவதுடன் அவர்களை விசாரணைக்கு கூட்டிச் செல்லும் போது அவர்களின் பெற்றோர்களையும் அழைத்துச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மக்களது அசௌகரியங்களைக் குறைப்பதற்காக சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைக்க அல்லது சோதனைகளைத் தளர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தமது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-ஐ)

## 300 தொலைபேசி..

(முதலாம் பக்கத் தொடர்)
வருக்கு இது தொடர்பாக நேற்றுப் பணிப்புரை வழங்கினார்.

நேற்று கொழும்பில் நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றிலேயே இந்தப் பணிப்புரை அவரால் வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் விமர்சிக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து ஆராய நேற்றுக் கொழும்பில் இந்த மாநாடு கூட்டப்பட்டது.

யாழ். மாவட்ட இணைப்புக் குழுத் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டு கோளுக்கு இணங்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு தபால் தந்திதொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீரவின் அலுவலகத்தில் நடந்தது.

இந்த மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீரா, பிரதி அமைச்சர் எம்.எச்.எம். ஹிஸ்புல்லா, பிரதி அமைச்சரின் செயலாளர் கே.சி. லோகேஸ்வரன், தபால்மா அதிபர் திருமதி கொட்டகதெனியா, தொலைத் தொடர்புத் திணைக்கள தலைவர் ஆர். டி. சோமசிறி மற்றும் டக்ளஸ் தேவானந்தாவின் சிரேஷ்ட இணைப்பாளர் எஸ். தவராசா, ஆலோசகர் டாக்டர் விக்கினேஸ்வரன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

★ யாழ். மாவட்டத்தில் பிரதி தபால் மா அதிபரின் இடத்துக்கு திருமதி போல் திலகநாயகத்தை நியமனம் செய்தல்.

★ யாழ். மாவட்டத்திலுள்ள தபால் நிலையங்களில் இருக்கும் 81 வெற்றிடங்களையும் வேலைவங்கி மூலம் நிரப்புதல்.

★ அழிந்து கிடக்கும் யாழ். மாவட்ட தபால் நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை எடுத்தல்.

★ விமானத்தில் எடுத்துச் செல்லும் தபால் பொதிகளின் அளவை 100 கிலோ கிராமாக அதிகரித்தல்.

★ யாழ். மாவட்ட தபாலகங்களுக்கு பற்றாக்குறையான தளபாடங்களை யாழ்ப்பாணத்திலேயே செய்தல்.

★ யாழ். மாவட்டத்துக்கு இரு [illegible] தபால் சேவைக்காக வழங்கல். (இ-3)

## பேராதனை பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் நேற்று வந்தன

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா எடுத்த நடவடிக்கையை அடுத்து யாழ்ப்பாணத்தில் இப் பரீட்சை நடக்க ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக விருக்கும் இப் பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான சுட்டிலக்கங்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

சுட்டிலக்கம் கிடைக்காதவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்த ரசீதுகளை எடுத்து வருமாறும் —

ரசீது இல்லாதவர்கள் பணம் செலுத்தி பரீட்சைக்கு தோற்ற முடியும் எனவும் — தெரிவிக்கப்பட்டது.

ரசீது இல்லாதவர்கள் 400 ரூபா பணத்துடன் வருமாறும், புவியியல் பாடத்தில் தோற்றுபவர்கள் 450 ரூபா பணத்துடன் வருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# இலங்கை மீண்டும் வெற்றி

சார்ஜாவில் நடைபெறும் இலங்கை, சிம்பாப்வே, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெறும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 243 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்தது. அரவிந்தடிசில்வா மாவன் அத்தபத்து முறையே 97, 94 ஓட்டங்களைப் பெற்றனர். இருவருமாக இணைந்து 3 ஆவது விக்கெட் இணையாக 183 ஓட்டங்களைக் குவித்தனர்.

பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. வெற்றிபெற பாகிஸ்தான் அணிக்கு வாய்ப்பிருந்த வேளையில் முத்தையா முரளிதரன் தனது திறமையான பந்துவீச்சினால் வெற்றியை இலங்கைக்குச் சாதகமாக்கினார். இவர் 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## பிரிட்டனின்...

(முதலாம் பக்கத் தொடர்)
களைத் தீர்க்க முயல வேண்டும் என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சருக்கு ''திவயின'' பத்திரிகை ஆலோசனை வழங்கியுள்ளது.

'அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடனடியாகப் பேச்சு நடக்கும் வாய்ப்பு இல்லை. புதிய பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் கொடிகாட்டவில்லை' என்று சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக 'த ஐலண்ட்' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3-10-150)

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்
வரவேற்கின்றேன்.

அரசின் இராணுவ உத்தி குறித்து எமது கட்சி எப்போதுமே கேள்விக்குறி எழுப்பி வந்துள்ளது.

நாம் சமாதான முயற்சிக்குக் குறுக்கே நிற்கப்போவதில்லை.

### பொது அணுகு முறை

இந்த உடன்பாட்டின் கீழ் எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகளில் இரு கட்சிகளும் ஒரு பொது அணுகு முறையைக் கடைப்பிடிக்கும்.

அரசு புலிகளுக்கு எதிராக நடத்தும் இராணுவ நடவடிக்கையின் வெற்றி குறித்து ஐ.தே.க. எப்பொழுதுமே சந்தேகம் எழுப்பி வந்தது.

விடுதலைப் புலிகளுடன் இதுவரை நேரடித் தொடர்பு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் இந்த வாரத்தில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாட்டின் கீழ் எமது கட்சி எதிர் காலத்தில் நடக்கக் கூடிய எந்தப் பேச்சு வார்த்தைகளுக்கும் தடங்கலாக இருக்க மாட்டாது.

ஐ.தே.க. எதிர் காலத்தில் பதவிக்கு வந்தால் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட எந்த உடன்படிக்கையையும் கௌரவிக்கும்.

நேற்று முன்தினம் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்பாடு எதிர் காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஏது நிலை மட்டுமே. அரசுடனான உறவு கசப்பாகவே இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வு பற்றிய பேச்சு வார்த்தைகளில் அரசுக்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு வழங்கும் வாக்குறுதி எதுவும் இல்லை. அரசமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கு அரசு வழக்கமான ஜனநாயக முறைகளில் தங்கியிருக்க வேண்டும். —

இப்படி அவர் கூறினார். (இ-3-4-10)

## அன்ரன்...

(முதலாம் பக்கத் தொடர்)
வே. பிரபாகரனை சந்தித்ததாக செய்தி வந்தது.

அவர் இந்தியா வழியாகச் சென்றது அதிகாரிகளுக்கும், இந்திய உளவுத் துறைக்கும் தெரியாதா என்று பத்திரிகைகள் கேள்வி எழுப்பியிருந்தன.

திலகர் பிரபாகரனின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு சென்றார் என்றும், சர்வதேச அளவில் விடுதலைப்புலிகள் தனிமைப் படுத்தப்படுவதை தவிர்க்க பேச்சுக்களை தொடங்க வேண்டியதன் அவசியத்தை விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கு எடுத்துக் கூற அவரைப் பிரபாகரன் அழைத்திருந்தார் என்றும் செய்திகள் கூறின.

திலகர் பாரிஸ் திரும்பியதும், கரிகாலன் என்ற உயர் மட்டத்தலைவர்களில் ஒருவரும் புலிகளின் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கமும் பாரிஸ் சென்றதாக விவரம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பாலசிங்கம் மருத்துவ சிகிச்சை பெற்றுச் சென்றார் என்றும் கூறப்படுகிறது.

அமைதிப் பேச்சுக்களுக்கு இந்தியாவின் ஆதரவைப் பிரிட்டன் கோரிப்பெற்றதாகவும் —

அதனால் தான் இருமுக்கிய விடுதலைப் புலித்தலைவர்களும் பத்திரமாக இந்தியா வழியாக பாரிஸுக்குப் பயணம் செய்ய முடிந்தது எனவும் விஷயமறிந்தவட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கு இந்தியாமுழு ஆதரவு வழங்கும் என்று இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் கூறியதாக ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது

அமைதிப் பேச்சுக்கள் குறித்து பிரபாகரன் இப்போது என்ன நினைக்கிறார் என்பது தெரியவில்லை என்றாலும், அப்படி பேச்சுக்கள் நடந்தால் கரிகாலன் தான் விடுதலைப் புலிகள் தரப்பில் பேசுவார் என்றும் விஷயமறிந்த வட்டாரங்கள் வலியுறுத்துகின்றன.

இப்படி இவர் தெரிவித்தார். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-04-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org